ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1653/21 - 2010 මැයි 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.13
1653/21 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் களனி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சி அங்கத்துவம் இல்லாதொழிந்தமை காரணமாக களனி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதா தலாலும்;

ஜனக சுசந்த பெரேரா கொலொன்னகே எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக் கட்சியைச் சேர்ந்தவரும், களனி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. நாணயக்காரவசம் குடாஹெட்டிகே நிஹால் பேர்னாட் சந்திரசேகர என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது களனி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் மொஹமட் மஹ்தூம் மொஹமட் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. நாணாயக்காரவசம் குடாஹெட்டிகே நிஹால் பேர்னாட் சந்திரசேகர என்பவர், களனி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். மொஹமட்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
களனி பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
2010, மே 10.

5 - 685

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமையை இழந்ததன் காரணமாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதா தலாலும்;

மொகமட் கனி மொகமட் மொகிடீன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக் கட்சியைச் சேர்ந்தவரும், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. நூர் முகம்மட் முகம்மட் இஸ்மாயில் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. நூர் முகம்மட் முகம்மட் இஸ்மாயில் என்பவர், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, ஏப்பிறல் 30.

5 - 686

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமையை இழந்ததன் காரணமாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவியானது வெற்றிடமாகியுள்ளதா தலாலும்;

மொகமட் கனி மொகமட் மொஹிடீன் எனும் தவிசாளர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய வருமான கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரை தீர்மானிக்குமாறு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. காசிம் பாவா சாகுல் ஹமீட் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. காசிம் பாவா சாகுல் ஹமீட் என்பவர், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, ஏப்பிறல் 30.

5 - 687

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.